முழுப் பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2025

# 47- இஸ்லாமிய நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்



**City of Baghdad**
The early period of Islamic Civilization

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# புள்ளி வழங்கும் திட்டம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2025
## 47- இஸ்லாமிய நாகரீகம்

1. நீங்கள் பொறுப்பேற்றுள்ள இப்பணி மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒன்றாதலால் மிக பொறுப்புணர்சசியோடு நிறைவேற்ற வேண்டியதொன்றாகும்.

2. இப்பணியில் நீங்கள் மிக நேர்மையாக நடக்க வேண்டுமென்பது பரீட்சைகள் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.

3. இப்பணி, மறுமையில் அல்லாஹ்விடத்தில் பதில் சொல்ல வேண்.டிய ஒரு செயல் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வது உங்களது செயற்பாடுகளை நேர்மையாக முன்னெடுத்துச் செல்வதற்கு நிச்சயம் உதவும்.

4. **புள்ளித்திட்டம்**
புள்ளித்திட்டம் பரீட்சகர்களிடைய ஒரு முகப்பாட்டை ஏற்படுத்துமாதலால், மாணவர்கள் நிச்சயமான முறையில் மதிப்பீடு செய்யப்படுவதற்காக புள்ளித்திட்டத்தை முழுமையாகப் பின்பற்றுவது மிக அவசியமாகும்.

5. **அறிவுறுத்தல்கள்**
பரீட்சைகள் திணைக்களம் அனைத்து அறிவுறுத்தல்களையும் பரீட்சகர்கள் முழுமையாகப் பின்பற்றுதல் அவசியமாகும்.

6. **விடைத்தாள் மதிப்பீடு**
விடைத்தாள்களை மதிப்பிடும் பணியை ஆரம்பிக்க முன் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடை யாது என்பதை புள்ளித்திட்டத்தை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் பிரதம கட்டுப்பாட்டாளர்/ பிரதம பரீட்சகர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. **புள்ளி வழங்கும் ஒழுங்கு**
**வினாப்பத்திரம் - 01**
இதில் 50 வினாக்கள் உண்டு. ஒவ்வொரு வினாவுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 வினாக்களுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**வினாப்பத்திரம் - 02**
இதில் பகுதி I பகுதி II என இரு பகுதிகள் உள்ளன. பகுதி I ஒவ்வொன்றும் ஐந்து விரிவுகளைக் கொண்ட மூன்று வினாகக்ளை உள்ளடக்கியுள்ளது. பகுதி II ஒவ்வொன்றும் இரண்டு பிரிவுகளைக் கொண்ட ஐந்து வினாக்களை உள்ளடக்கியுள்ளது. பகுதி I ல் இரண்டு வினாக்களுக்கும், பகுதி II ல் மூன்று வினாக்களுக்கும் பரீட்சார்த்திகள் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் ஒழுங்கு | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் 01<br>50 வினாக்கள்,<br>தலா 01 புள்ளிகள் | 50 x 01 | 50 |
| வினாப்பத்திரம் 02<br>பகுதி I 02 வினாக்கள்<br>பகுதி II 03 வினாக்கள்<br>தலா 20 புள்ளிகள் | 02 x 20<br>03 x 02 | 40<br>60 |



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................................ ✓ △ 4/5
........................................................................................
........................................................................................

(ii) ........................................................................................ ✓ △ 3/5
........................................................................................
........................................................................................

(iii) ........................................................................................ ✓ △ 3/5
........................................................................................
........................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

### கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

### புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I இற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

o o o



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

47 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இஸ்லாமிய நாகரிகம் பூரணத்துமானது என்பது உணர்த்தப்பட்ட சந்தர்ப்பம்
(1) ஹுதைபிய்யா உடன்படிக்கை (2) ஹஜ்ஜதுல் வதா (3) ஹன்தக் யுத்தம்
(4) மக்கா வெற்றி (5) மதீனா சாசனம்

**2.** ஜாஹிலிய்யா சமூகத்தில் ஒவ்வொரு கோத்திரமும் தமக்கென குலதெய்வங்களை வைத்திருந்தனர். குலதெய்வ வழிபாடுகளுக்குப் பூசாரியாகப் பணியாற்றியவர்
(1) ஆலிம் (2) ஜாஹில் (3) காமில்
(4) காஹின் (5) ஆதில்

**3.** அல்-குர்ஆனில் பொதிந்துள்ள பிரதானமான விடயப்பரப்பு
(1) வரலாறு (2) சட்டங்கள் (3) அறிவியல்
(4) சுத்தம் (5) வணக்க வழிபாடுகள்

**4.** நபி (ஸல்) அவர்களுக்குக் கடிதம் எழுதி நபித்துவத்துக்கு உரிமை கோரியவர்
(1) அஸ்வத் அன்ஸி (2) ஸஜா (3) முஸைலமா
(4) துலைஹா பின் குவைலித் (5) மாலிக் பின் துவைரா

**5.** பின்வருவனவற்றுள் சூபி சிந்தனை அடிப்படையில் வெளிவந்த தப்ஸீர் நூல் யாது?
(1) தப்ஸீர் இப்னு கஸீர் (2) ஜாமிஉல் பயான் (3) மபாதிஹுல் கைப்
(4) ஹகாஇகுத் தப்ஸீர் (5) தப்ஸீர் ஜலாலைன்

**6.** உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்கும் இறை தொடர்பை ஏற்படுத்துவதற்குமான இஸ்லாமிய வழிமுறை
(1) வுஜூத் (2) விலாயத் (3) சுஹ்த் (4) திக்ர் (5) முரீத்

**7.** காஸாவில் பிறந்து இஸ்லாமிய சட்டத்துறை வளர்ச்சிக்குப் பங்காற்றிய அறிஞர்
(1) இமாம் அபூ ஹனிபா (ரஹ்) (2) இமாம் மாலிக் (ரஹ்)
(3) இமாம் ஷாபிஈ (ரஹ்) (4) இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்)
(5) இமாம் நவவி (ரஹ்)

**8.** கணவன், மனைவிக்கென வகுக்கப்பட்டுள்ள கடமைகளுள் மனைவியின் கடமை **அல்லாதது** யாது?
(1) அன்பாக நடத்துதல் (2) நம்பிக்கையாக இருத்தல்
(3) தேவைகளை அறிந்து செயற்படல் (4) பிள்ளைகளை வளர்த்தல்
(5) குடும்பத்துக்குச் செலவு செய்தல்

**9.** காலத்தால் முந்திய பண்டைய நாகரிகம்
(1) எகிப்து (2) மொசப்பத்தேமியா (3) சிந்துவெளி
(4) உரோமம் (5) கிரேக்கம்

**10.** 'அஸ்ஸலாத் வமகாஸிதுஹா' எனப்படுவது
(1) சட்டவிதி ஆகும்.
(2) ஒரு நூல் ஆகும்.
(3) வழிபாட்டு முறை ஆகும்
(4) சட்ட மூலாதாரம் ஆகும்.
(5) வரலாற்று நிகழ்வு ஆகும்.

**11.** தஜ்தீத் என்பதன் கருத்து யாது?
(1) நீக்குதல் (2) மாற்றுதல் (3) உருவாக்குதல் (4) கைவிடுதல் (5) சீர்செய்தல்

**12.** மு.ஃதஸிலாக்களின் உப பிரிவுகளுள் ஒன்று
(1) வாஸிதிய்யா
(2) வாஸிலிய்யா
(3) பாதினிய்யா
(4) வஹ்தானிய்யா
(5) ஜஹ்மிய்யா

**13.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - இலங்கையின் அமைவிடம்
B - பாவாதமலை
C - அரேபியரின் படையெடுப்பு
D - துறைமுக வசதிகள்
E - சமுத்திர வணிகப் பாதை

மேற்குறித்தவற்றுள் அரேபியாவுக்கும் இலங்கைக்குமான பூர்வீக உறவுகளுடன் தொடர்புடைய காரணிகளை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D
(2) A, B, C, E
(3) A, B, D, E
(4) A, C, D, E
(5) B, C, D, E

**14.** சமூக மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபாடு கொள்வது பின்வரும் எந்த படிநிலையைச் சார்ந்தது?
(1) முரூரிய்யாத்
(2) ஹாஜியாத்
(3) தஹ்ஸீனியாத்
(4) ஜிபில்லியாத்
(5) தஹ்ரீமாத்

**15.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| | அல்-குர்ஆன் தொடர்புடைய முன்னெடுப்புகள் | காலப்பகுதி |
|---|---|---|
| (i) | அல்-குர்ஆன் அருளப்படல் | A - தாபிஈன்கள் காலம் |
| (ii) | அல்-குர்ஆனை நூலுருப்படுத்தல் | B - நவீனகாலம் |
| (iii) | அல்-குர்ஆன் இலத்திரனியலாக்கப்படல் | C - ஸஹாபாக்கள் காலம் |
| (iv) | அல்-குர்ஆன் வசனங்களுக்கு குறியீடு இடப்படுதல் | D - தற்காலம் |
| (v) | அல்-குர்ஆன் அச்சிடப்படல் | E - நபி (ஸல்) அவர்கள் காலம் |

மேலே அட்டவணையில் அல்-குர்ஆனுடன் தொடர்புடைய முன்னெடுப்புகளின் ஒழுங்குக்கேற்ப அவற்றின் காலப்பகுதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான தெரிவு யாது?
(1) A, E, D, B, C
(2) B, D, A, E, C
(3) C, D, A, E, B
(4) D, A, B, E, C
(5) E, C, D, A, B

**16.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| | ஆளுமைகள் | ஆற்றிய பங்களிப்பு |
|---|---|---|
| (i) | ஜ.ஃபர் ஸாதிக் (ரஹ்) | A - அல்-இபானா அல்-உஸூலுத்தியானா எனும் நூலாக்கம் |
| (ii) | அபுல் ஹஸன் அல் அஷ்அரி (ரஹ்) | B - ஷீஆ இமாமத் கோட்பாடு |
| (iii) | அலி பின் தப்ரீஸ் (ரஹ்) | C - அல்-குர்ஆனை பிரதிபண்ணி விற்பனை செய்தல் |
| (iv) | அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (ரஹ்) | D - நஸ்தலிக் எழுத்தணி வகையை அறிமுகம் செய்தல் |
| (v) | அவுரங்கஸிப் (ரஹ்) | E - 'அஸ்ஸிமா' இசைத்துறை நூலாக்கம் |

மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள ஆளுமைகளின் ஒழுங்குக்கேற்ப அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A, B, C, D, E
(2) A, B, D, E, C
(3) B, A, C, E, D
(4) B, A, D, E, C
(5) B, D, A, E, C


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**17.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| | அல்-குர்ஆன் வசனங்கள் | சுட்டும் விடயம் |
|---|---|---|
| (i) | உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான். | A - இலகு மார்க்கம் |
| (ii) | ஆண்களே பெண்களை நிர்வகிப்போராவர். | B - மதச் சுதந்திரம் |
| (iii) | அல்லாஹ் எந்தவொரு ஆன்மாவுக்கும் தாங்க முடியாத கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. | C - சொத்துரிமை |
| (iv) | ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவற்றுள் உரிய பங்குண்டு. அவ்வாறே பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவற்றுள் உரிய பங்குண்டு. | D - ஆண், பெண் உறவு |
| (v) | உங்கள் மார்க்கம் உங்களுக்குரியது. எனது மார்க்கம் எனக்குரியது. | E - குடும்பத் தலைமை |

மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள அல்-குர்ஆன் வசனங்களின் ஒழுங்குக்கேற்ப அவை சுட்டும் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான தெரிவு யாது?

(1) A, B, C, D, E (2) B, C, D, A, E (3) C, D, A, E, B
(4) D, E, A, C, B (5) E, B, D, C, A

**18.** ஹதீஸ் வகைகளுள் 'அல்-மஷ்ஹூர்' எனப்படுவது
(1) நன்கு பிரபல்யமான ஹதீஸ் ஆகும்.
(2) இரு அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்ட ஹதீஸ் ஆகும்.
(3) பல அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்ட ஹதீஸ் ஆகும்.
(4) சஹாபியின் கூற்றாக அமைந்த ஹதீஸ் ஆகும்.
(5) அறிவிப்பாளர் தொடர் முறிவுற்ற ஹதீஸ் ஆகும்.

**19.** பின்வருவனவற்றுள் இஸ்லாமிய நாகரிகம் பற்றிய கீழைத்தேய ஆய்வாளர்கள் முன்வைக்கும் விமர்சனம் யாது?
(1) தெய்வீக வழிகாட்டலைக் கொண்டது.
(2) பகுத்தறிவு மயமானது.
(3) விஞ்ஞானம், தொழில்நுட்பத்தை மேலோங்கச் செய்கிறது.
(4) முஸ்லிம் ஆட்சியின் வெளிப்பாடாக உள்ளது.
(5) அரசை சமயத்திலிருந்து வேறுபடுத்துகின்றது.

**20.** இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சமூகவியலின் பிரதான விடயத் தலைப்பு யாது?
(1) மனிதன் (2) சமூகம் (3) மதம் (4) பண்பாடு (5) நாகரிகம்

**21.** ஸஹீஹ் வகை ஹதீஸ் கிரந்தம் ஒன்றின் விஷேட பண்பு
(1) பிரபல்யமான ஹதீஸ்களைக் கொண்டிருத்தல்
(2) ஆதாரபூர்வமான ஹதீஸ்களைக் கொண்டிருத்தல்
(3) சட்டம் சார்ந்த ஹதீஸ்களைக் கொண்டிருத்தல்
(4) முதவாதிரான ஹதீஸ்களைக் கொண்டிருத்தல்
(5) ஹதீஸ் குத்ஸி வகையைக் கொண்டிருத்தல்

**22.** வஹியானது அறிவு மூலமாகத் தொழிற்படுவது
(1) பகுத்தறிவாகவாகும். (2) புலனுணர்வாகவாகும்.
(3) அனுபவ அறிவாகவாகும். (4) அருளப்பட்ட அறிவாகவாகும்.
(5) தத்துவ ஞானமாகவாகும்.

**23.** சமூக நலன், அதன் மேம்பாடு என்பவற்றில் ஈடுபடுவது பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு யாது?
(1) வாஜிப் (2) முபாஹ் (3) ஸுன்னத்
(4) பர்ளு கிபாயா (5) முஸ்தஹப்

**24.** "உமது இரட்சகன் நாடியிருந்தால் பூமியிலுள்ள அனைவரும் ஈமான் கொண்டிருப்பர்" எனும் அல்-குர்ஆன் வசனத்தின் கருத்து யாது?
(1) இஸ்லாம் மேன்மையான மதமாகும்.
(2) எம்மதமும் சம்மதமானது.
(3) பல மதங்களின் இருப்பு இயற்கையானது.
(4) மதங்கள் பரஸ்பரத் தாக்கம் கொண்டவை.
(5) மதவேறுபாடு தவிர்க்க முடியாதது.

**25.** பின்வருவனவற்றுள் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்க.
(1) தேசிய பாதுகாப்புக்கும் பந்தோபஸ்துக்கும் பங்காற்றினர்.
(2) சிங்கள மன்னர்களுடன் இணைந்து காலனித்துவ சக்திக்கு எதிராகப் போரிட்டனர்.
(3) இலங்கையில் யூனானிய மருத்துவ முறையினை அறிமுகம் செய்தனர்.
(4) மன்னர்களின் அரச பிரதானிகளாகப் பணிபுரிந்தனர்.
(5) அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தனர்.

**26.** ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி தொகுப்பதற்கான அரச ஆதரவை வழங்கிய உமையா ஆட்சியாளர்
(1) அப்துல் மலிக் பின் மர்வான்
(2) சுலைமான் பின் வலீத்
(3) வலீத் பின் அப்துல் மலிக்
(4) உமர் பின் அப்துல் அஸீஸ்
(5) மர்வான் பின் ஹகம்

**27.** இஸ்லாம் என்பது 'ரஹ்மதுன் லில் ஆலமீன்' எனக் குறிப்பிடப்படுகிறது. 'ரஹ்மதுன் லில் ஆலமீன்' என்பதன் கருத்து யாது?
(1) உலகிற்கான வழிகாட்டி
(2) உலகிற்கான அருட்கொடை
(3) உலகிற்கான மார்க்கம்
(4) உலகிற்கான அற்புதம்
(5) உலகிற்கான அமைதி

**28.** அரேபியாவில் முதலாவது யூத குடியேற்றம் எச்சந்தர்ப்பத்தில் தோற்றுவிக்கப்பட்டது?
(1) உரோமர்கள் பலஸ்தீனை வெற்றிகொண்ட போதாகும்.
(2) முஸ்லிம்கள் எகிப்தைக் கைப்பற்றிய போதாகும்.
(3) மக்கா வெற்றியின் போதாகும்.
(4) உரோமர்கள் வட ஆபிரிக்காவை வெற்றிகொண்ட போதாகும்.
(5) முஸ்லிம்களின் பாரசீக வெற்றியின் போதாகும்.

**29.** நபி (ஸல்) அவர்களுக்கு ஆரம்ப கட்டத்தில் அருளப்பட்ட வஹியும் அவர்களின் பிரசாரமும் எந்த விடயங்களை உள்ளடக்கியிருந்தது?
(1) கிலாபத், விலாயத், இபாதத்
(2) தௌஹீத், ரிஸாலத், மஆத்
(3) ஸலாத், ஸகாத், மஆத்
(4) மஆத், ஸதகா, ஸகாத்
(5) ரிஸாலத், இபாதத், இமாரத்

**30.** ஜாஹிலிய்யாக் காலத்தில் உரைநடை இலக்கியம் வளர்ச்சி குன்றியமைக்கான காரணம் **அல்லாதது**
(1) மனன சக்தி குறைவாகக் காணப்பட்டமை
(2) கவிதையில் ஆர்வம் காட்டப்பட்டமை
(3) எழுத்து, வாசிப்பு அறிவு போதாதிருந்தமை
(4) எழுத்து வடிவம் முழுமை பெறாதிருந்தமை
(5) எழுத்துச் சாதனங்களைப் பயன்படுத்தாதிருந்தமை

**31.** 'இஷாரதுன்னஸ்' என்பது
(1) தெளிவான சட்ட முடிவாகும்.
(2) சட்டவாக்கப் படிமுறையாகும்.
(3) தெளிவான சட்ட வசனத்திலிருந்து பெறப்படும் ஏனைய முடிவாகும்.
(4) சட்ட நியாயவாத அணுகுமுறையாகும்.
(5) உலமாக்களின் முடிவாகும்.

**32.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - மனிதனைப் பக்குவப்படுத்துகிறது.
B - தெய்வீக உணர்வைத் தருகிறது.
C - அறம் அடிப்படையிலான வாழ்க்கையைப் போதிக்கிறது.
D - மனசாட்சியை மேம்படுத்துகிறது.
E - உலகியல் வசதிகளை மேம்படுத்துகிறது.

மேற்குறித்தவற்றுள் சமயத்தின் அவசியத்தை உறுதிப்படுத்தும் விடயங்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D
(2) A, B, C, E
(3) A, B, D, E
(4) A, C, D, E
(5) B, C, D, E


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**33.** 'ஷரீஆ' என்ற பதத்தின் கருத்து **அல்லாதது**
(1) நீரூற்று (2) விளக்கம் (3) விருப்பம் (4) தெளிவான பாதை (5) ஆரம்பம்

**34.** இஸ்லாமிய பொருளியல் கோட்பாட்டில் வட்டி தடுக்கப்பட்டிருப்பதற்கான பிரதான காரணம் யாது?
(1) செலவீனங்களைக் கட்டுப்படுத்தல்
(2) சேமிப்பை ஊக்குவித்தல்
(3) ஏழ்மையை ஒழித்தல்
(4) சொத்துரிமையை மறுதலித்தல்
(5) பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தல்

**35.** ஷரீஆ, பிக்ஹ் ஆகியன பற்றிய சரியான கூற்று யாது?
(1) பிக்ஹ் ஷரீஆவை உள்ளடக்கியது.
(2) ஷரீஆ பிக்ஹ் இனைத் தழுவியது.
(3) ஷரீஆ பிக்ஹ் இனை விட விரிவானது.
(4) ஷரீஆ இறை விருப்பத்தையும் பிக்ஹ் சட்டவாக்கத்தையும் குறிக்கிறது.
(5) பிக்ஹ் சட்டங்களை மாத்திரமும் ஷரீஆ அதன் மூலங்களையும் குறிக்கிறது.

**36.** பால்நிலை சமத்துவம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் யாது?
(1) ஆண் மேலானவன். (2) பெண் மேலானவள்.
(3) ஆணும் பெண்ணும் சமமானவர்கள். (4) இருபாலாரும் பிரத்தியேகப் பொறுப்புடையவர்கள்.
(5) இருபாலாரும் சமமற்றவர்கள்.

**37.** இந்திய துணைக் கண்டத்தில் **தோற்றம் பெறாத** இஸ்லாமிய சீர்திருத்த இயக்கம்
(1) தப்லீக் ஜமாஅத் (2) ஜமாஅதே இஸ்லாமி
(3) இ∴வான் அல் முஸ்லிமீன் (4) தேவ்பந்தி இயக்கம்
(5) அலிகார் இயக்கம்

**38.** பின்வரும் இஸ்லாமிய அடிப்படைகளைக் கருதுக.
A - அனைவரும் அல்லாஹ்வின் படைப்பினங்களாகும்.
B - அனைவரும் மதத்தேர்வு, கொள்கைச் சுதந்திரம் உடையவர்கள்.
C - அனைவரும் தனித்துவ அடையாளங்களை விட்டுக்கொடுக்க வேண்டியவர்கள்.
D - அனைவரும் பரஸ்பரம் உதவிக்கொள்ள வேண்டியவர்கள்.
E - அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள்.
F - அனைவரும் மொழி மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளைக் கொண்டவர்கள்.

மேற்குறிப்பிட்டவற்றுள் பல்சமய சமூகத்தவர்களுடன் கூடிவாழுதல், இணைந்து செயலாற்றுதல் ஆகியன தொடர்பான இஸ்லாமிய அடிப்படைகளை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D, E (2) A, B, C, E, F (3) A, B, D, E, F
(4) A, C, D, E, F (5) B, C, D, E, F

**39.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - கொள்கைச் சுதந்திரம், சிந்தனை வளர்ச்சி
B - அரசியல் மோதல்கள், பிளவுகள்
C - முஸ்லிம்களின் மார்க்கப்பற்று, ஈமானிய உணர்வு
D - பிற பண்பாட்டுக் கலப்பு, ஆதிக்கம்
E - அந்நிய படையெடுப்புகள், வெற்றிகள்

மேற்குறிப்பிட்டவற்றுள் இஸ்லாமிய பண்பாடு, நாகரிகம் ஆகியன தேக்க நிலையை அடைந்தமைக்கு ஏதுவான காரணிகளை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E
(4) A, C, D, E (5) B, C, D, E

**40.** விஜயபாகு மன்னனின் முடிசூட்டு விழாவின்போது அனுசரணையாளராகச் செயற்பட்ட முஸ்லிம் பிரமுகர்
(1) அபூ உஸ்மான் (2) ஷேய்க் ஆலிம்
(3) பெரியதம்பி மரைக்கார் (4) காலித் பின் அபூ பகாயா
(5) ஷேய்க் அப்துல் காதர்

● பின்வருவன இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற பிரிவுகளாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு **41** தொடக்கம் **45** வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| A - இஸ்மாஈலிய்யா | F - ஹாதிபிய்யா | K - நுஸைரிய்யா |
| B - கதரிய்யா | G - அய்யூபிய்யா | L - ஜஹ்மிய்யா |
| C - ஸமாமிய்யா | H - ஜபரிய்யா | M - நக்ஷபந்தியா |
| D - ஸைதிய்யா | I - செல்ஜூக்கிய்யா | N - பாதிமிய்யா |
| E - ஷாதுலிய்யா | J - ஹிஷாமிய்யா | O - காதிரிய்யா |

**41.** மு∴தஸிலாக் கொள்கைப் பிரிவினரைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C (2) B, C, J (3) C, D, J (4) C, F, J (5) F, J, L

**42.** ஷீயா பிரிவினரைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, E (2) A, D, K (3) B, C, K (4) B, D, F (5) D, F, K

**43.** அகீதாவில் முரண்பட்ட பிரிவினரைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, C, F (2) B, H, L (3) C, D, J (4) C, H, K (5) D, F, J

**44.** சூபி தரீக்கா பிரிவுகளைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, F (2) C, H, O (3) D, K, M (4) E, M, O (5) L, M, N

**45.** சிற்றரசுகளைத் தோற்றுவித்த பிரிவினரைக் கொண்ட தெரிவு யாது?
(1) B, F, J (2) C, I, K (3) F, G, L (4) G, H, O (5) G, I, N

● **46** தொடக்கம் **50** வரையிலுள்ள ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடி பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பை எடுத்துக்காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விவரிக்கிறது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | பல்சமய பன்மைத்துவம் என்பது இறை நாட்டமாகும். | மதச் சுதந்திரம் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். |
| **47.** | இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் யாவும் இலட்சியங்களைக் கொண்டவையாகும். | மதீனாவில் ஏற்பட்ட பஞ்ச சூழ்நிலையில் திருட்டுக் குற்றத்துக்கான தண்டனை இடைநிறுத்தி வைக்கப்பட்டது. |
| **48.** | இப்னு பதூதாவின் வருகையின்போது பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை ஆட்சி செய்தான். | இப்னு பதூதாவின் வருகையின்போது இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக வாழ்ந்து வந்தனர். |
| **49.** | அப்பாஸிய ஆட்சியினால் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் பரப்பெல்லை வியாபிக்கப்பட்டது. | உமையா ஆட்சியாளர்கள் இஸ்லாமிய சாம்ராஜ்யங்களின் பல பகுதிகளில் ஆராய்ச்சி நிலையங்களை நிறுவினர். |
| **50.** | ஹுதைபிய்யா உடன்படிக்கை அப்போதைய முஸ்லிம் சமூகத்துக்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கியது. | ‘ஹுதைபிய்யா’ என்பது முஸ்லிம்களுக்கும் யூத கோத்திரங்களுக்கும் இடையிலான ஒப்பந்தமாகும். |

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 47 | විෂයය<br>பாடம் | இஸ்லாமிய நாகரிகம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 5 | 21. | 2 | 31. | 3 | 41. | 4 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 4 | 32. | 1 | 42. | 2 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 4 | 33. | 3 | 43. | 2 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 3 | 34. | 5 | 44. | 4 |
| 05. | 4 | 15. | 5 | 25. | 5 | 35. | 3/5 | 45. | 5 |
| 06. | 4 | 16. | 4 | 26. | 4 | 36. | 4 | 46. | 3 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 2 | 37. | 3 | 47. | 1/5 |
| 08. | 5 | 18. | 3 | 28. | 1 | 38. | 3 | 48. | 2 |
| 09. | 2 | 19. | 5 | 29. | 2 | 39. | 3 | 49. | 4 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 3 | 40. | 3 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) ரிஸாலத், கிலாபத் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) ஆஹாத் ஹதீஸ்களிலிருந்து 'ஹதீஸ் கரீப்' என்பதனை வேறுபடுத்துக.

(iii) 'அல்-முஜ்தஹித் முத்லக் அல்-முன்தஸிப்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(iv) 'தஜ்தீத்' என்பதன் கருப்பொருளைச் சுருக்கமாக விளக்குக.

(v) தப்ஸீர், த.்.வீல் ஆகியவற்றைத் தொடர்புபடுத்துக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) இஸ்லாம் மாற்றியமைத்த ஜாஹிலிய்யா சமூக ஒழுங்குகள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.

(ii) நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற அரசியல் ஒப்பந்தங்கள் **இரண்டினை** விவரிக்குக.

(iii) விஞ்ஞான தொழில்நுட்ப விருத்திக்கான அப்பாஸிய ஆட்சியாளர்களின் பங்களிப்புகள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.

(iv) ஐரோப்பாவில் இஸ்லாம் அறிமுகமானதற்கு ஏதுவான காரணிகள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.

(v) பிரதான முஸ்லிம் சிற்றரசுகள் **நான்கு** பற்றி விவரிக்குக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) 'இமாரத்' என்பதனை சூழல் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தி **இரண்டு** உதாரணங்கள் தருக.

(ii) குடும்பம், உறவினர், அயலவர் எனும் உறவுநிலை பற்றிய இஸ்லாத்தின் பெறுமானத்தை விளக்குக.

(iii) மகாஸித் ஷரீஆவின் படிநிலைகளை எடுத்துக்காட்டும் வகையில் **நான்கு** உதாரணங்கள் தருக.

(iv) பிரபஞ்சம் படைக்கப்பட்டதற்கான காரணங்கள் **நான்கினைத்** தெளிவுபடுத்துக.

(v) ஆயிஷா (ரழி) அவர்களின் சிறப்பியல்புகள் **நான்கினை** விவரிக்குக.

(04 × 5 = 20 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** (i) "மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான பூர்வீகத் தொடர்புகள் இஸ்லாத்தின் பரவலுக்கு ஏதுவாய் அமைந்தன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை **ஐந்து** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(ii) பைதுல் மக்திஸ் விடுவிப்பு முனைவில் அய்யூபிய அரசின் பங்களிப்புகளை விவரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**5.** (i) மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்கள் **ஐந்தினை** விளக்குக.

(ii) பிற சமூகத்தவர்களுடனான முஸ்லிம்களின் நல்லுறவு பற்றிய இஸ்லாத்தின் போதனைகளுள் **பத்து** விடயங்களை விவரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**6.** (i) வானியல் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகளை மதிப்பிடுக.

(ii) இமாம் கஸ்ஸாலி (ரஹ்), ஷேய்க் அஹ்மத் ஸிர்ஹிந்தி (ரஹ்) ஆகியோரின் சமய மறுமலர்ச்சிச் சிந்தனைகளை ஒப்பிட்டு விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**7.** (i) "இஸ்லாம் என்பது சமயமும் சமூகமும் சார்ந்ததாகும்." பொருத்தமான **ஐந்து** அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(ii) சமூக உருவாக்கத்தில் பெண்களின் வகிபங்கினை எடுத்துக்காட்டும் வகையில் இஸ்லாம் முன்வைக்கும் **ஐந்து** அம்சங்களை விவரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** (i) "இஸ்லாத்தின் முன்னோடிகால முஸ்லிம்களின் வாழ்வு, சுன்னாவைப் புலப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது." விளக்குக.

(ii) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி விவரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

## பகுதி – 1

**01 i. ரிஸாலத், கிலாபத் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.**

| ரிஸாலத் | கிலாபத் |
|---|---|
| தூதுத்துவம் | பிரதிநிதித்துவம் |
| வஹி மூலமான வழிகாட்டல் | வஹி மூலமான வழிகாட்டலை நிர்வகித்தல் |
| இறையியல் கோட்பாடு | நடைமுறை சார்ந்தது |
| ரஸுல்மார்கள் | கலீபாக்கள் |
| நபியவர்களுடன் முற்றுப்பெற்றது | கிலாபத் நிர்வாகம் தொடர்கின்றது |
| தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பொறுப்பு | அனைவரினதும் பொறுப்பு |

**(ஒவ்வொன்றுக்கும் இரண்டு விடயம் குறிப்பிட்டால் 2x2 = 04 புள்ளிகள்)**

**ii. ஆஹாத் ஹதீஸ்களிலிருந்து “ஹதீஸ் கரீப்” என்பதனை வேறுபடுத்துக.**

- முதவாதிருடைய தரத்தை அடையாத அறிவிப்பாளர் எண்ணிக்கை கொண்ட ஹதீஸ்கள், ஆஹாதான ஹதீஸ் எனப்படும்.
- ஒரு அறிவிப்பாளர் தொடரைக் கொண்ட ஹதீஸ்கள், ஹதீஸ் கரீப் எனப்படும்.

**(ஏதேனும் இரண்டு வேறுபாடு குறிப்பிட்டால் 2x2 = 04 புள்ளிகள்)**

**iii. “அல்-முஜ்தஹித் முத்லக் அல்-முன்தஸிப்” என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.**

குறித்த ஒரு இமாமின் சட்ட மூலாதாரங்களைப் பின்பற்றி சட்டத் தீர்ப்புக்களையும் பிரச்சினைகளுக்கான தீர்ப்புக்களையும் வழங்குவார். சில போது தனக்கென சில விதிகளையும் வகுத்துச் செயற்படுவார். தான் சரியெனக் கண்ட ஆனால் இமாம் தீர்ப்பளிக்காத பிரச்சினைகளுக்கும் தீர்ப்புச் சொல்வார். இவர்களது சட்டத்தீர்ப்புகள் அவர் ஏற்றுக் கொண்ட இமாமின் கருத்துக்கு மாற்றமாகவும் அமையலாம். இதுவே “அல்-முஜ்தஹித் முத்லக் அல்-முன்தஸிப்” எனப்படும்.

**(பொருத்தமான வரைவிலக்கணம் 04 புள்ளிகள்)**

**iv. “தஜ்தீத்” என்பதன் கருப்பொருளைச் சுருக்கமாக விளக்குக.**

- தஜ்தீத் என்பது மொழிரீதியில் புதுப்பித்தல், புணரமைத்தல் என்ற கருத்தைத் தருகின்றது.
- தஜ்தீத் என்பது, ஒன்றை அகற்றி மற்றொன்றை உருவாக்குவது அல்ல. மாறாக சீர்குலைந்துள்ள ஒன்றைப் புனரமைத்தல் ஆகும்.

**(சுருக்கமாக விளக்கியிருப்பின் 04 புள்ளிகள்)**

**v. தப்ஸீர், த.்.வீல் ஆகியவற்றைத் தொடர்புபடுத்துக.**

- தப்ஸீர் எனும் சொல்லைப் போன்றே த.்.வீல் எனும் சொல்லும் அல்குர்ஆன் விளக்கவுரையை குறிக்கிறது.
- தப்ஸீர் என்பது அல்குர்ஆன் வசனங்களுக்கான நேரடிக் கருத்தையும், த.்.வீல் என்பது அல்குர்ஆன் வசனங்களுக்கான தத்துவார்த்த ரீதியான விளக்கத்தையும் குறிக்கிறது.

**(இவ்வாறான ஏதேனும் இரண்டு கருத்துக்கள் தொடர்புபடுத்தி எழுதியிருப்பின் 04 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**02 i. இஸ்லாம் மாற்றியமைத்த ஜாஹிலிய்யா சமூக ஒழுங்குகள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.**

- கோத்திர வெறி.
- பிழையான திருமண ஒழுங்குகள்.
- அடிமை சமூகம்.
- பெண்களின் இழிநிலை.
- பாவச் செயல்கள்.

**(இதுபோன்ற விடயங்கள் 4 இனை சுருக்கமாக விளக்கியிருப்பின் 4x1= 04 புள்ளிகள்)**

**ii. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இடம் பெற்ற அரசியல் ஒப்பந்தங்கள் இரண்டினை விவரிக்குக.**

1. மதீனா சாசனம்:
   மதீனா சமூகத்தைப் பாதுகாப்பதற்காக யூதக் கோத்திரங்கள் மற்றும் ஏனைய சமூக குழுக்களுடனும் செய்துகொண்ட உடன்படிக்கையாகும். இதன் பிரதான நோக்கம் மதீனாவைப் பாதுகாத்தலாகும். இதில் இணையும் ஒவ்வொரு குழுக்களினதும் கடமைகளும் உரிமைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2. ஹுதைபிய்யா உடன்படிக்கை:
   நபி (ஸல்) அவர்களுக்கும் மக்கா குறைஷிகளுக்குமிடையில் இடம்பெற்ற ஒப்பந்தம். இதன் பிரதான நோக்கம் போரிலிருந்து தவிர்ந்து எதிர்காலத்தில் சமாதானத்துடன் இணைந்து செயற்படுதல்.

3. நஜ்ரான் ஒப்பந்தம்
   நபி (ஸல்) அவர்களுக்கும் நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களுக்குமிடையில் நடைபெற்ற உடன்படிக்கை. இது சமய நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் ஓர் ஒப்பந்தமாகும்

**(இவற்றுள் ஏதாவது இரண்டு ஒப்பந்தங்கள் சுருக்கமாக விளக்கியிருப்பின் 2x2 = 04 புள்ளிகள்)**

**iii. விஞ்ஞான தொழிநுட்ப விருத்திக்கான அப்பாஸிய ஆட்சியாளர்களின் பங்களிப்புக்கள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.**

- பைதுல் ஹிக்மாவை நிர்மாணித்தமை.
- பிற அறிவியல் கருவூலங்களை மொழிபெயர்த்தமை.
- வானியல் ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கியமை.
- அறிவியல் உபகரணங்களை கண்டுபிடித்தமை (மருத்துவம், வானியல், புவியியல், கணிதம்)
- இராணுவ தளபாடங்கள் கண்டுபிடித்தமை.
- கப்பல் கட்டும் முயற்சியில் ஈடுபட்டமை.
- அறிவியல், கலாநிலையங்களை நிர்மாணித்தமை.
- விஞ்ஞான, தொழிநுட்ப கோட்பாடுகளை (கருத்துக்களை) முன்வைத்தமை

**(இவைபோன்ற நான்கு பங்களிப்புகளை சுருக்கமாக விளக்கியிருப்பின் 4x1= 04 புள்ளிகள்.**

**iv. ஐரோப்பாவில் இஸ்லாம் அறிமுகமானதற்கு ஏதுவான காரணிகள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.**

- ஸ்பெய்ன், ஸிஸிலியில் முஸ்லிம்களின் எழுச்சி
- தாரிக் பின் ஸியாதின் வெற்றி
- சிலுவை யுத்தம்
- ஆட்சி விஸ்தரிப்பு
- குர்துபா போன்ற பல்கலைக்கழகங்களும் அறிவியல் பங்களிப்பும்.
- இஸ்லாமிய கலாநிலையங்கள் காணப்பட்டமை.
- அறிவியல் மற்றும் கலாசார பரிமாற்றம்.
- முஸ்லிம்களின் நீதமான ஆட்சி
- வர்த்தகத் தொடர்புகள்.
- முஸ்லிம்களின் முன்மாதிரிமிக்க குணாதிசியங்கள்.
- உஸ்மானியர்களின் எழுச்சி.

**(இவை போன்ற 04 காரணிகள் சுருக்கமாக விளக்கியிருப்பின் 4x1 = 04 புள்ளிகள்)**

**v. பிரதான முஸ்லிம் சிற்றரசுகள் நான்கு பற்றி விவரிக்குக.**

- புவைஹியர் (ஹி. 334 – 447)
- செல்ஜுகியர் (ஹி. 432 – 467)
- பாத்திமியர் (ஹி. 269 – 567)
- ஐயூபியர் (ஹி. 567 – 648)

**(நான்கு சிற்றரசுகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் ஏதாவது பிரதான குறிப்பொன்றை குறிப்பிட்டிருப்பின் 4x1 = 04 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**03 i. "இமாரத்" என்பதனை சூழல் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தி இரண்டு உதாரணங்கள் தருக.**

- இமாரத் என்பது சுற்றுச் சூழலை பாதுகாத்தலைக் குறிக்கும்.
- உதாரணங்களாக:
  மரங்களை நடுதல், சுற்றுச் சூழலை மாசுபடுத்தாதிருத்தல், சிரமதானப் பணிகளில் ஈடுபடல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல். தரிசு நிலங்களை பசுந்தரைகளாக மாற்றுதல்.

**(இவை போன்ற இரு உதாரணங்கள் குறிப்பிட்டிருப்பின் 04 புள்ளிகள்)**

**ii. குடும்பம், உறவினர், அயலவர் எனும் உறவுநிலை பற்றிய இஸ்லாத்தின் பெறுமானத்தை விளக்குக.**

- மூன்று சாராரும் நல்லுறவோடு நடாத்தப்படவேண்டும் என்ற கடமைப்பாடு கொண்டவர்கள்.
- இவை மூன்றும் கடமைகளும் உரிமைகளும் சார்ந்தவை.
- இவ்வுறவுகளை முறித்து வாழ்தல் பாவமாகக் கருதப்படுகின்றது.
- இவை தொடர்பான அல்-குர்ஆன் அல்லது ஹதீஸ் கருத்துக்கள்

**(இவ்வுறவுகள் தொடர்பான இஸ்லாத்தின் பெறுமாணத்தை வலியுறுத்தும் வகையிலான கருத்துக்கள் 04 குறிப்பிட்டிருப்பின் 4x1= 04 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**iii. மகாஸித் ஷரீஆவின் படிநிலைகளை எடுத்துக்காட்டும் வகையில் நான்கு உதாரணங்கள் தருக.**

- ழரூரிய்யாத் – பொருத்தமான உதாரணம் குறிப்பிடல்
- ஹாஜிய்யாத் - பொருத்தமான உதாரணம் குறிப்பிடல்
- தஹ்ஸீனிய்யாத் - பொருத்தமான உதாரணம் குறிப்பிடல்

**(மகாஸித் ஷரீஆவின் படிநிலைகள் மூன்றினையும் குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளியும் மூன்று படிநிலைகளுக்கும் பொருத்தமான உதாரணம் குறிப்பிட்டிருப்பின் 04 புள்ளிகள்)**

**iv. பிரபஞ்சம் படைக்கப்பட்டதற்கான காரணங்கள் நான்கினை தெளிவுபடுத்துக.**

- பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ் என்பதனை எடுத்துக்காட்டுதல்
- மனிதனுக்காக படைக்கப்பட்டமை
- மனிதனின் பிரதிநிதித்துவத்தை நிறைவேற்றுவதற்காக.
- அல்லாஹ்வின் படைப்பாற்றல் மற்றும் மகிமையை வெளிப்படுத்துவதற்காக.
- படைப்பாளனை அறிந்து வழிபடுவதற்காக.
- அல்லாஹ்வைத் துதி செய்வதற்காக.
- பிரபஞ்ச நியதிகளையும் ஒழுங்கமைப்புக்களையும் உணர்த்துவதற்காக.

**(இவை போன்ற நான்கு காரணிகள் தெளிவுபடுத்தியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**v. ஆயிஷா (ரழி) அவர்களின் சிறப்பியல்புகள் நான்கினை விவரிக்குக.**

- உம்மஹாதுல் மு.'.மீன்களில் ஒருவர்
- உயர் அறிவும் ஞானமும் கொண்டவர்
- நபியவர்களின் குடும்பவியல் தொடர்பான அதிக கருத்துக்களை வழங்கியவர்
- நபியவர்களின் வபாத்திற்குப் பின்னர் சமூகத்திற்கு வழிகாட்டிய பெண்மணி.
- அதிக ஹதீஸ்களை அறிவித்த பெண்மணி
- அல்-குர்ஆன் சுட்டிக்காட்டிய பெண்மணிகளில் ஒருவர்.
- ஜமல் போருக்கு தலைமை வகித்த பெண்மணி.

**(இவை போன்ற நான்கு சிறப்பியல்புகள் விவரித்தியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## பகுதி - 11

**04 i. "மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான பூர்வீகத் தொடர்புகள் இஸ்லாத்தின் பரவலுக்கு ஏதுவாய் அமைந்தன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஐந்து காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

1. இலங்கையின் புவியியல் நிலை: கடல் வணிகப் பாதையில் (Silk Route) இலங்கை வகிக்கும் பூகோள நிலையும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்தமை. இதனால் இஸ்லாத்தின் செய்தி ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கையை வந்தடைந்தது.
2. மத்திய கிழக்கு நாட்டு வணிகர்கர்கள் பருவப் பெயர்ச்சிக் காற்றைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொண்டதனால் இலங்கையில் பல மாதங்கள் தங்கியமையும் அதனால் ஏற்பட்ட உறவுகளும்.
3. இலங்கையின் துறைமுகங்கள் ஏற்று - இறக்குமதி துறைமுகங்களாக அமைந்திருந்தமையால் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து முஸ்லிம் வர்தகர்களை ஈர்த்தது. இது இஸ்லாத்தின் பரவலுக்கு ஏதுவாகியது.
4. நன்னீர் - உணவு வசதி, கப்பல்களைத் நிறுத்தல், பழுதுபார்தல் போன்ற வசதிகள் காணப்பட்டமை.
5. இலங்கையில் மத்திய கிழக்கு நாட்டு வணிகர்களுக்கு அவசியமான வர்த்தகப் பண்டங்கள் கிடைத்தமை. (மாணிக்கக் கற்கள், யானைத் தந்தம், ஏலம், கறுவா, கராம்பு, சாதிக்காய் போன்ற வாசனைத் திரவியங்கள்)
6. மன்னர்களும், சுதேச மக்களும் மத்திய கிழக்கு நாட்டு முஸ்லிம்களை வரவேற்று ஆதரித்தமை.
7. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தைப் போதிப்பதற்காக தூதுவர்களை அனுப்பியமை எடுத்துக்காட்டாக -வஹ்ப் இப்னு அபீ கப்ஸ் (ரழி)
8. அரசியல் சூழ்நிலைக்கேற்ப மத்திய கிழக்கைச் சேர்ந்த பனூ ஹாஷிம்கள் போன்றோர் இலங்கையில் குடியேறியமை.
9. வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்த பாவா ஆதம் மலைத் தொடரை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வருகைதந்து தரிசித்தமை. இவ்வாறு வருகை தந்தவர்களின் ஊடாகவும் இஸ்லாம் அறிமுகமாகி பரவியது.
10. இலங்கை பூர்வீக மன்னர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளுடன் இராஜதந்திர நல்லுறவு காணப்பட்டமையும் இஸ்லாத்தை அறிந்துவர தூதுவர்களை அனுப்பியமையும். (இப்னு ஸஹ்ரயார் - அஜாயிபுல் ஹிந்த்)

**(இவை போன்ற 05 காரணிகள் இஸ்லாத்தின் பரவலுடன் தொடர்புபடுத்தி எழுதப்பட்டிருப்பின் 2 x 5 = 10 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**ii. பைதுல் மக்திஸ் விடுவிப்பு முனைவில் அய்யூபிய அரசின் பங்களிப்புக்களை விவரிக்குக.**

1. முஸ்லிம்களின் புனித தளங்களில் ஒன்றான பைத்துல் மக்திஸ் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆதிக்கத்தின் கீழ் மாறிமாறி இருந்தமை. இந்த ஆதிக்கம் கிறிஸ்துவ முஸ்லிம் அரசுகளுக்கிடையில் பகைமையையும் போரையும் ஏற்படுத்தியமை. (சிலுவை யுத்தம்).
2. அப்பாஸியர் காலத்தில் தோற்றம் பெற்ற சிற்றரசுகளுள் ஐயூபியர்கள் போற்றத்தக்கவர்கள்.
3. இவ் ஆட்சி மரபில் தோன்றிய முக்கிய ஆட்சியாளரான ஸலாஹுத்தீன் ஐயூபி அவர்கள், பைத்துல் மக்திஸை விடுவிப்பதற்காக மேற்கொண்ட பணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன.
4. பைதுல் மக்திஸை விடுவிப்பதில் பல்வேறு உபாயங்களை அவர் கையாண்டார்.
5. முஸ்லிம் உலகிக்கு அழைப்பைவிடுத்து ஒரே கூடையின் கீழ் ஒற்றுமைப்படுத்தினார்.
6. இதற்கு தடையாக அமைவார்கள் எனக் கருதி, பாத்திமியர்களிடமிருந்து எகிப்தை விடுவித்தார்.
7. இதற்காக கடற்படையை பலப்படுத்தினார்.
8. தொடர்ச்சியாக 16 வருடங்கள் போரிட்டு ஹித்தீன் (1187) போரில் சிலுவை வீரர்களை எதிர்கொண்டு பைதுல் மக்திஸை விடுவித்தார். இவ் யுத்தம் வரலாற்று போற்றுகின்றது.
9. எதிரிகளிடம் காட்டிய மனிதபிமானம் அவர்களுடனான சமரச உடன்படிக்கையும் பைத்துல் மக்திஸ் பல வருடங்களாக முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் இருப்பதற்கு வழிகோலியது.

**(அறிமுகம் - 02 புள்ளிகள்**

**இது போன்ற 04 பங்களிப்புக்கள் விபரித்திருப்பின் 4x2 = 08 புள்ளிகள்)**
**மொத்தம் - 10 புள்ளிகள்**

**05 i. மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்கள் ஐந்தினை விளக்குக.**

1. மனிதன் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்காக.
2. பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக தொழிற்படுவதற்காக.
3. சுவனத்தை இலக்காகக் கொண்டு வாழ்வை அமைத்துக்கொள்வதற்காக.
4. இபாதத், இமாரத், கிலாபத் எனும் அடிப்படைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக.
5. அல்லாஹ் மனிதனை பரீட்சிப்பதற்காக.
6. மனிதன் தனது ஆன்மீக இலௌகீக தேவைகளை நிறைவேற்றுவதற்காக.
7. படைப்புக்களை ஆய்வுசெய்வதற்காக.
8. அல்லாஹ்வின் அத்தாட்சிகள் ஊடாக அவனை அறிந்து கொள்வதற்காக.

**(இது போன்ற 05 கருத்துக்கள் விளக்கியிருப்பின் 2 x 5 = 10 புள்ளிகள்)**

**ii. பிற சமூகத்தவர்களுடனான முஸ்லிம்களின் நல்லுறவு பற்றிய இஸ்லாத்தின் போதனைகளுள் பத்து விடயங்களை விவரிக்குக.**

1. அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்பினமே.
2. உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள்.
3. கொள்கைச் சுதந்திரம்.
4. மனித குலத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை.
5. எல்லா மனிதர்களும் சகோதரர்கள்.
6. எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள்.
7. சமூகங்கள், மொழிகள், கலாசாரங்கள் போன்ற பன்மைத்துவம் இறை நியதிகளில் ஒன்று.
8. பரஸ்பர உதவிகள்
9. நீதி யாவருக்கும் பொதுவான முறையில் செலுத்தப்பட வேண்டும்.
10. கரைந்துவிடாமல் கலந்து வாழ்வது.

**(இவ்வாறான 10 போதனைகள் விபரித்திருப்பின் 1 x 10 = 10 புள்ளிகள்)**

**06 i. வானியல் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகளை மதிப்பிடுக.**

- **அறிமுகம் குறிப்பிடல்**

(முஸ்லிம் உலகில் அறிவியல் சிந்தனையும் அறிவியல் துறை வளர்ச்சியும் ஆரம்ப காலம் முதல் வளர்ச்சிபெற்று, அப்பாசிய காலத்தில் பொற்கால நிலையை அடைந்தது. முஸ்லிம்கள் பங்காற்றிய அறிவியல் துறைகளுள் வானியல் துறை முக்கியமானது)

1. முஸ்லிம் அறிஞர்கள் வானியல் நூல்களை எழுதியமை.
2. கிரேக்க, பாரசீக, இந்திய வானியல் நூல்களை மொழிபெயர்த்தமை.
3. பிற மொழி நூல்களை திரணாய்வு செய்து திருத்தியமைத்தமை (விமர்சன நூல்கள்)
4. பைதுல் ஹிக்மாவை நிர்மாணித்து வானியல்துறைக்கு பங்களிப்புச் செய்தமை.
5. இராஜ்ஜியத்தின் பல பாகங்களிலும் வானியல் அவதான நிலையங்களை நிறுவியமை.
6. வானியல் உண்மைகளையும், கோட்பாடுகளையும் அறிமுகம் செய்தமை.
7. வானியல் அட்டவணைகள், கருவிகளை வழங்கி சாதனை புரிந்தமை.
8. ஐரோப்பாவின் வானியல் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு அடித்தளமாக அமைந்தது.
9. இத்துறையின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முஸ்லிம் அறிஞர்களுள் குவாரிஸ்மி, அல்-பதானி, அல்-பிரூனி .... போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.
10. வானியல் துறை நூல் விளக்கவுரை, கலைக்களஞ்சியம், அகராதி போன்றவற்றை உருவாக்கினர்.

**(இவ்வாறான 05 பங்களிப்புகள் மதிப்பிடப்பட்டிருப்பின் 2 x 5 = 10 புள்ளிகள்)**

**ii. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) ஷேய்க் அஹ்மத் ஸிர்ஹிந்தி (ரஹ்) ஆகியோரின் சமய மறுமலர்ச்சிச் சிந்தனைகளை ஒப்பிட்டு விளக்குக.**

| இமாம் கஸ்ஸாலி (ரஹ்) | ஷேய்க் அஹ்மத் ஸிர்ஹிந்தி (ரஹ்) |
|---|---|
| 5ஆம் நூற்றாண்டு | 7ஆம் நூற்றாண்டு |
| பக்தாத்தை மையப்படுத்திய சமய மறுமலர்ச்சிப் பணி | இந்தியாவை மையப்படுத்திய சமய மறுமலர்ச்சிப் பணி |
| கிரேக்க, பகுத்தறிவு செல்வாக்குக்கு எதிராக செயற்பட்டமை | அத்வைதம் (தீனே இலாஹி) செல்வாக்குக்கு எதிராக செயற்பட்டமை |
| மார்க்கக் கலைகளை உயிர்ப்பித்தார். | மார்க்கக கலைகளை உயிர்ப்பித்தார். |
| ம.்.ஃமூனின் சமய ஆதிக்கதிற்கு எதிராக செயற்பட்டார். | மன்னர் அக்பரின் சமய ஆதிக்கதிற்கு எதிராக செயற்பட்டார். |
| நூலாக்கத்தின் ஊடான இஸ்லாத்துக்கு தொண்றாற்றியமை | நக்ஷபந்திய அமைப்பின் ஊடான இஸ்லாத்துக்கு தொண்றாற்றியமை |
| இஸ்லாத்தை புணரமைத்த முஜத்தித் | இஸ்லாத்தை புணரமைத்த முஜத்தித் |

**(ஐந்து விடயங்கள் ஒப்பிட்டு எழுதியிருப்பின் 5x2 = 10 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**07 i. "இஸ்லாம் என்பது சமயமும் சமூகமும் சார்ந்ததாகும்." பொருத்தமான ஐந்து அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை நியாயப்படுத்துக.**

1. அல்குர்ஆனும் சுன்னாவும் சமயம், சமூகம் சார்ந்த போதனைகளை முன்வைத்துள்ளமை
2. இஸ்லாம் என்பது தனிநபர், குடும்பம், சமூகம், தேசியம் என அனைவருக்குமான முழுமையான வாழ்க்கைத் திட்டத்தைக் கொண்டுள்ளமை.
3. இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகள் கொள்கை வழிச் சமூகத்தை உருவாக்குவதை மையமாகக் கொண்டுள்ளமை.
4. இஸ்லாமிய அடிப்படை வழிபாடுகள் சமூகப் பெறுமானங்களைக் கொண்டுள்ளமை.
5. இஸ்லாமிய ஷரீஆவும், அதன் அமுலாக்கமும் சமூக கட்டமைப்பை வேண்டி நிற்கின்றமை.
6. இஸ்லாமிய ஒழுக்கப் போதனைகள் ஜாஹிலிய்யப் சமூகத்துக்கு மாற்றமான தூய, ஒழுக்கமான சமூகத்தை கட்டியெழுப்ப விளைகின்றமை.
7. ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத், பர்ழு கிபாயா போன்றன சமயம், சமூகம் சார்ந்ததாகும்.
8. மஸ்ஜிதுன் நபவியின் வகிபாகம் சமயமும் சமூகமும் சார்ந்ததாகவே காணப்பட்டமை.
9. ஹிஜ்ரத் சமய, சமூக மேம்பாட்டை இலக்காகக் கொண்டே இடம் பெற்றமை.
10. தனிநபர்களை விட சமூக நலனே முதன்மைப்படுத்தப்படுகின்றமை.

**(இவை போன்ற ஐந்து அம்சங்கள் நியாயப்படுத்தி எழுதியிருப்பின் 5x2 = 10 புள்ளிகள்)**

**ii. சமூக உருவாக்கத்தில் பெண்களின் வகிபங்கினை எடுத்துக்காட்டும் வகையில் இஸ்லாம் முன்வைக்கும் ஐந்து அம்சங்களை விவரிக்குக.**

1. சமூக உருவாக்கத்தில் ஆணும் பெண்ணும் தமக்கே உரித்தான கடமைகளையும், உரிமைகளையும் கொண்டவர்கள்.
2. நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் சமூக மேம்பாட்டுப் பணியில் பெண்களுக்கும் சம பங்குண்டு. (அல்-குர்ஆன் 09:71)
3. பெண்களை சமூகப்பணிகளில் ஈடுபடுமாறு அல்-குர்ஆன் பணிக்கின்றது. (09:72)
4. பெண்களுக்கும் அரசியலில் தனித்துவமான பங்குண்டு.
5. நீதியான ஆட்சியாளர்களை தெரிவு செய்வதிலும் பெண்களுக்கு சம உரிமை உண்டு.
6. குடும்பத் தலைவி என்ற வகையில் நற்பிரஜைகளையும், சமூகத் தலைவர்களையும் உருவாக்குவதில் பெரும்பங்குண்டு.
7. இஸ்லாம் பெண்களுக்கு பொருளாதார உரிமையையும், சமூக விவகாரங்களில் அதனை செலவிடுவதற்கான உரிமை வழங்கியுள்ளது.
8. பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கும், நிருவாகப் பணிகளில் பங்குகொள்வதற்கும் சமூக ஒழுங்கமைப்பில் பங்காற்றுவதற்கும் இஸ்லாம் அனுமதித்துள்ளது.
9. சிறந்த சமூகத்தை உருவாக்கும் கல்வித் துறையில் பெண்களுக்கும் பங்குண்டு.

**(இவ்வாறான 05 அம்சங்கள் விபரித்திருப்பின் 2 x 5 = 10 புள்ளிகள்)**

**08 i. "இஸ்லாத்தின் முன்னோடிகால முஸ்லிம்களின் வாழ்வு, சுன்னாவைப் புலப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது." விளக்குக.**

- **அறிமுகம்**
  இஸ்லாத்தின் முன்னோடிகாலமான நபியவர்களதும், நபித்தோழர்களதும் காலப்பகுதி இஸ்லாமிய வாழ்வுக்கான முன்மாதிரிகளைக் கொண்டிருந்தது.

1. நபியவர்களது வாழ்வை முழுமையாக பின்பற்றி வாழ்ந்தமை.
2. நபியவர்களது தலைமைத்துவத்திற்கு முழுமையாக கட்டுப்பட்டு செயற்பட்டமை.
3. நபியவர்கள் முன்வைத்த அகீதாவை ஏற்றுக் கொண்டமை.
4. நபியவர்களது ஏவல்களை ஏற்றும் விலக்கல்களை முழுமையாக தவிர்ந்தும் நடந்தமை.
5. அல்-குர்ஆனை கற்பதிலும், ஸுன்னாவை நடைமுறைப்படுத்துவதிலும் முன்னோடிகளாக செயற்பட்டமை.
6. தன் உயிரிலும் மேலாக நபியவர்களை நேசித்தமை.
7. இவ்வாறான முன்மாதிரிகளை பின்பற்றி வாழ்ந்ததனால் அல்-குர்ஆன் 'ரழியல்லாஹு அன்ஹும் வரழூ அனஹும்' எனப் போற்றுகின்றமை.
8. நபியவர்களது காலத்து செயற்பாடுகளே ஹதீஸ்களின் உள்ளடக்கங்களாக அமைந்தமை.
9. இம்முன்னோடிக் காலம் மார்க்கத்தின் அனைத்துத் துறைகளுக்குமான ஆரம்ப காலமாக அமைந்திருந்தது.
10. இஸ்லாமிய அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்து செயற்பாடுகளுக்குமான முன்மாதிகளைக் கொண்டிருந்தது.

**(அறிமுகம் 2 புள்ளிகள்,**
**04 அம்சங்கள் விளக்கியிருப்பின் 2 x 4 = 08 புள்ளிகள்**
**மொத்தம் - 10 புள்ளிகள்**

**ii. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி விவரிக்குக.**

**இமாம் பற்றிய அறிமுகம் :**

- இமாமவர்களின் முழுப்பெயர் முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ் ஷாபிஈ என்பதாகும்.
- பலஸ்தீனத்தைச் சேர்ந்த காஸாவில் ஹி 150 இல் பிறந்து ஹி 204 இல் எகிப்தில் மறைந்தார்கள்.

**வாழ்வும் பணியும் :**

1. இமாம் அவர்கள் இஸ்லாமிய உலகின் பல பகுதிகளுக்கும் சென்று அங்கு வாழ்ந்த அறிஞர்களிடத்தே இஸ்லாமிய கலைகளைப் பயின்றார். சுப்யான் பின் உயைனா, இமாம் மாலிக், இமாம் முஹம்மத் இப்னு ஹஸன் அஷ் ஷைபானி (ரஹ்) போன்றோர் பிரதான ஆசிரியர்களாவர்.
2. இமாமவர்களது சட்ட அடிப்படைகளாக, அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா, அல்-இஜ்மா, ஸஹாபாக்களின் கருத்துக்கள், அல்-கியாஸ், இஸ்திஸ்ஹாப் ஆகியன காணப்பட்டன.
3. இமாமவர்களின் சட்டத்துறைப் பங்களிப்புக்குச் சான்றாக அவர் எழுதிய நூல்கள் அமைந்துள்ளன. (கிதாப் அல் உம்மு, கிதாப் அர் ரிஸாலா பீ உஸுலில் பிக்ஹ்)
4. உஸுலுல் பிக்ஹ் கலைக்கு பங்களிப்பு செய்த முன்னோடியாவார்
5. கால இட வேறுபாடுகளுக்கு அமைய வேறுபட்ட பத்வாக்களை வழங்கல். (கவ்லுல் கதீம் - கவ்லுல் ஜதீத் )
6. இமாமவர்களின் மாணவர்களில் இஸ்மாஈல் இப்னு யஹ்யா அல் முஸ்னி, அர்-ராபிஇ, யூசுப் பின் யஹ்யா (ரஹ்) போன்றோர் மிக முக்கியமானவர்கள்.
7. இவர்களது சட்டப் போக்கு ஷாபிஈ மத்ஹபாகக் கொள்ளப்படுகின்றது.

**(அறிமுகம் 2 புள்ளிகள்,**
**வாழ்வும் பணியும் பற்றிய 04 விபரங்களுக்கு 4X2= 08 புள்ளிகள்)**
**மொத்தம் - 10 புள்ளிகள்**


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න